# ரேணுகாம்பாள் குகைக்கோயில் அமைப்பும் தமிழி எழுத்தும்

**ரா. டில்லிபாபு**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

**ஆய்வுச்சுருக்கம்**

சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நங்கமங்கலம் ஊர்பக்கத்தில் ரேணுகாம்பாள் குகைக்கோயில் அமைந்துள்ளது . கோயில் நுழைவாயில் சுடுகாட்டில் அமைந்துள்ளது. அங்கிருந்து மண்பாதை வழியே 800 மீட்டர் தொலைவில் மலையின் மீது கோயில் அமைந்துள்ளது. ஆந்திரமாநிலத்திற்கு உட்பட்டசித்தூருக்கும், தமிழ்நாட்டுக்கு உட்பட்டவேலூருக்கும் இடையில்மலைமேல் அமைந்துள்ளது. இக்குகைக்கோயில் இரண்டு குகைத்தளங்கள் கொண்டு ஒன்றிலிருந்து இன்னொருதளத்திற்கு படிகள் அமைந்துள்ள பெரியகுகைக் கோயில் ஆகும். வெளியில் இரண்டு மண்டபங்கள் உள்ளன. அதில் ஒன்று முன் மண்டபம் பிற்கால சோழர் காலத்தில் கட்டடப்பட்டுள்ளது. குகைக் கோயிலின் வெளிப்பகுதியில் சமணர்படுக்கைகள் காணப்படுகிறது. அதன் அருகில் தமிழிக்கல் வெட்டு காணப்படுகிறது. அங்குள்ள பாறையில் உள்ள சுனைநீரில் சோழர்கால அம்மன் சிலைகள் பச்சை நிறகற்களால் செதுக்கப்பட்டுள்ளன. அங்கு குன்றின் மேல் விளக்கேற்றும் தூண் அமைந்துள்ளது. அந்ததூண் அருகில் நின்று பார்த்தால் பக்கத்துமலையில் மற்றொரு தூண் தென்படுகிறது. அந்த தூணும் மற்றொரு தூணுடன் வழிகாட்டுகிறது. மொத்தம் ஒன்பது தூண்கள் 25 கி.மீ தொலைவில் வேலூர் மற்றும் சித்தூர் மலைகளில் காணப்படுகிறது. இவை மட்டுமல்லாமல் என்னை கள ஆய்வுக்குத் தூண்டிய கருவறையில் உள்ள 5 செ.மீ உயரமும் 3 செ.மீ அகலமும் கொண்ட ஒரு கல் கோபுரம் போன்ற அமைப்பில் அதில் பலசிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அது எந்தகாலத்தது என்று அறுதியிட்டு கூற இயலவில்லை. அதில் மனித விரல் நகம் அளவுக்கு ஒரு சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மண்டபங்களிலும் சிற்பங்கள் காணப்படுகிறது. இங்குகாணப்படும் சமணர் படுக்கையும் தமிழி எழுத்தும் தமிழ்நாட்டு தொல்லியல் துறையால் பதிவு செய்யப்படாதவை. அதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதே ஆய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

ரேணுகாம்பாள் குகைகோயில் ஆந்திர மாநிலத்திற்கு உட்பட்டசித்தூருக்கும்தமிழ்நாட்டுக்கு உட்பட்ட வேலூருக்கும் இடையில் மலைமேல் அமைந்துள்ளது. அங்கு இரண்டு குகைத்தளங்கள் மற்றும் மண்டபங்கள், சிலைகள், சிற்பங்கள் காணப்படுகிறது. வெளிப்புறத்தில் சிலைகள் மற்றும் தமிழி எழுத்து, சமணப்படுக்கை, சுனைநீர் தென்படுகிறது. இக்கோயில் உண்ணாழியில் காணப்படும் சிலைமற்றும் வெளிக்காற்று உள்வர சந்துகள் காணப்படுகிறது. சோழர்கள், விஜயநகர அரசு, நாயக்கர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் போன்றோர் ஆட்சி அப்பகுதியில் நடைப் பெற்றுள்ளன. சிக்கல் இரண்டு மொழி பேசும் மக்கள், இரண்டு மாநிலத்தின் எல்லை மற்றும் மலைப்பகுதி, தகவல் திரட்டுதல் ஆகும். அங்குள்ள மலைகளில் காணப்படும் கற்தூண்கள் என பல மர்மங்கள் அடங்கியுள்ளன. இருந்தாலும் எதுவும் காரணகாரியம் இல்லாமல் இல்லை. என்னால் கள ஆய்வின் மூலம் கிடைத்த செய்திகளையும் மற்றும் அதன் பழமையும் தமிழி எழுத்தும் பதிவு செய்யும் நோக்கத்தோடு இவ்வாய்வு செய்யப்படுகிறது.

## அமைவிடம்

சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நுழைவாயில் உள்ளது.

நங்கமங்கல ஊருக்கு எதிர் திசையில் அமைந்துள்ளதுசுடுகாடுகோயில் நுழைவாயிலாகும் அதன் வழியாக 800 மீட்டர் தொலைவில் கோயில் அமைந்துள்ளது. செல்லும் பாதை மண் பாதை, இது ஆந்திரப் பகுதியில் உள்ளது. கோயில் மகிமண்டலம் R.F தமிழ்நாட்டு மலைமேல் அமைந்துள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

**பெயர்காரணம்**

இக்கோயிலுக்கு இரண்டு பெயர்கள் சொல்லப் படுகிறது. அவை நங்கமங்கலம்மன் மற்றும் ரேணுகாம்பாள் என அழைக்கப்படுகிறது. தெலுங்கு பேசும் மக்கள் நங்கமங்கலம்மன் என்று அழைக்கின்றனர்.தமிழ் பேசும் மக்கள்ரேணுகாம்பாள் என்று அழைக்கின்றனர். பழமையான பல பதிவுகளில் ரேணுகாம்பாள் கோயில் எனபதிவு உள்ளதால் இப்பெயர் இடம்பெறுகின்றது.

**கோயில் முன்புறம்**

கோயில் முன்னர் இடது புறத்தில் உள்ள வேப்பமரத்தின் அடியில் பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. அதற்கு முன் வில்வமரம் உள்ளது. அங்கு சிவலிங்கம் அமைந்துள்ளது. அதன் முன்புறம் நந்தி உள்ளது. சிவலிங்கத்தின் கீழ் விநாயகர், முருகன், விஷ்ணு என சிறிய சிலைகள் அமைந்துள்ளன. வலது பக்கத்தில்திரிசூலம் உடுக்கையுடன்அமைந்துள்ளது சிவலிங்கத்திற்கு இடது பக்கத்தில் நவகிரகங்கள் பளிங்குகற்கள் மூலம் அரைவட்ட அமைப்பில் சிறிய கோபுர அமைப்பின் உள்ளே பதிக்கப் பட்டுள்ளது. நவகிரகத்துக்கு இடது பக்கத்தில் நாகலிங்கம் அமைந்துள்ளது. அது இருபாம்பு பின்னிக் கொண்டு நடுவில் சிவ லிங்கச் சிற்பம் காணப்படுகிறது.

**கோபுரம்**

கருவறைக்கு மேல் கோபுரம் அமைந்துள்ளது. மண்டபங்களுக்கு பின் இடது புறத்தில் அமைந்துள்ளது. அதன் மேல் மூன்று கலசங்கள் உள்ளது. திராவிட கட்டிடக்கலை அமைப்பில் பிற்காலத்தில் அமைத்துள்ளனர். விமானத்தின் கீழ் கண்டப் பகுதியில்யாளி, சிங்கம் சிற்பங்களை அம்மன் சுதையில் அமைத்துள்ளனர். அதற்கு கீழ் பிரஸ்தரம் மற்றும் அரைதூண்கள் அமைந்துள்ளன அதனுடன் அம்மன் சிற்பம் சிவலிங்கத்திற்கு மாடு பால் கொடுப்பது போல் அமைந்துள்ளது. முன் புறம் மாடு தலை வெட்டப்பட்டு ஒரு மனி தன்கையில் அறுவாளுடன் நிற்கின்றான். அவன் முன் சிங்கத்தின் மேல் அமர்ந்த அம்மன் எட்டுகைகளுடன் ஆயுதங்கள் கொண்டு உக்கிரமாக உள்ளாள். மனிதசிற்பத்தை நோக்கியபடி அமைந்துள்ளது உக்கிர அம்மன் சிலை. அம்மனின் உருவங்களில் பலசிற்பங்கள் காணப்படுகின்றன.

**மண்டபங்கள்**

மண்டபம் இரண்டு உ்ள்ளது . அவை முன் மண்டபம் அல்லது மாக மண்டபம் மற்றொன்று அர்த்த மண்டபமாகும்.

**முன் மண்டபம்**

முன் மண்டபம் மேல் அம்மன் சிற்பம் நடுபகுதியில் அமைந்துள்ளது. அம்மனுக்கு வலது பக்கத்தில் விநாயகர் சிற்பம் உள்ளது. இடது பக்கத்தில் முருகன் சிற்பம் அமைந்துள்ளது. இரு மூலையிலும் சிங்கம், அரக்கி சிற்பங்கள் காணப்படுகிறது. மண்டபத்தில் நான்கு தூண்கள் உள்ளது. முதலில் உள்ள இரண்டு தூண்களுடன் இரும்பு கேட் இணைக்கப்பட்டுள்ளது. உள் நுழைவாயிலின் முன்புறம் இரண்டு தூண்கள் உள்ளது. அதன் இடது பக்கத் தூணின் கீழ் அசோகச்சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது. வலது தூணின் கீழ் அசோகச் சிங்கம் போல

காணப்படுகிறது. அதற்கு பின் நெருப்பு குண்டம் செங்கற்களால் செய்யப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் இரு புறமும் கற்களால் சுண்ணாம்பால் அடைக்கப்பட்டுள்ளது. இருபுறம் இரும்பு கதவு வைக்கப்பட்டுள்ளது.

**அர்த்த மண்டபம்**

குகையின் முன் மண்டபம் பழமையான மண்டபம் விஜயநகரக் காலத்தில் கட்டப்பட்ட மண்டபமாகும். இதில் நான்கு தூண்கள் கண்ணுக்கு தென்படுகிறது. பிறதூண்கள் கற்களைக் கொண்டு மற்றும் சுண்ணாம்பின் மூலம் அடைக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு தூண்கள் இரட்டை தூண்களாகும். இடது பக்கதூணியில் முன் புறக் கீழ்பகுதியில் ஆஞ்சநேயர், இடது புறம் சிங்கம், நான்கு இதழ்பூ, பின்புறம் பாம்புடன் இணைந்த உடுக்கை, வலது புறம் சூலாயிதம், பிறை நிலவு, பூ காணப்படுகின்றன. வலது பக்க இரட்டை தூணின் முன்னர் கீழ்ப்புறமாக குழந்தை பிறப்பு சிற்பம் காணப்படுகிறது. வலது புறம் சிறுத்தை, சங்கு, திருமால் நாமம் உள்ளது. பின் புறம் சக்கரம் உள்ளது. இடது புறம் பானை, நாய், கடகம் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. அடுத்த இரண்டு தூண்களில் குகையின் முன் இடது தூணில் முன்புறம் சிங்கம் அமர்ந்தநிலையில், எட்டு இதழ்பூ, யாளி உள்ளது. வலது புறம் சூரியன் அல்லது நிலவு, சிவலிங்கம் உள்ளது. இடது மற்றும் பின்புறம் செங்கற்களால் மூடப்பட்டுள்ளது. வலது தூணில் இடது புறம் பெண் வணங்குவதைப் போன்ற சிற்பம், நான்கு இதழ்பூ, சூரிய மற்றும் சந்திர கிரகணம் போல அமைந்துள்ளன. முன்புறம் இதழ்வட்டமாக கொண்ட பூ உள்ளது. பின் மற்றும் வலது புறம் செங்கற்களால் சுண்ணாம்பால் மூடப்பட்டுள்ளது. பிற தூண்கள் சுவரினால் மறைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் இடது வலது புறச் சுவரில் தமிழ், தெலுங்கில் எழுத்துப்பலகை வைத்துள்ளனர். அதில் முன் மண்டபம், கோயில் கோபுரம், கிணர் ஆகியவற்றில் சில மாற்றங்களை 1965-ம் ஆண்டில் செய்துள்ளனர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

மண்டபத்தின் மேல் சிற்பங்கள் காணப்படுகின்றன. அதில் மீன்யாளி, பல்லி அல்லது ஓணான், வடதிசை நோக்கிய மீன்கள், பூவடிவ சிற்பம், தென்திசை நோக்கிய மீன்கள், உடும்பு சிற்பம், மீன், நீர் வாழ் உயிரினம், இரண்டு மீன்கள் எதிரெதிரே உள்ளது. மீன் யாளி சிறுமீனை உண்பது போல சிற்பமும் அமைந்துள்ளது. குகையின் முன் புறம் சிங்கசிலை மற்றும் பலிபீடம் அமைந்துள்ளது. உள்நுழைவின் முன் இடது புறத்தில் சிவலிங்க அறை அமைத்துள்ளனர். வலது புறம் அம்மன் மற்றும் விநாயகர் சிலைகள் உள்ளது இதற்கும் அறை அமைத்துள்ளனர். குகையின் முன் இரும்பு கேட் மற்றும் மரகதவு அமைத்துள்ளனர்.

**குகையின் உள்வாயில்**

குகையின் வாயிற்படியில் நான்கு இதழ் கொண்ட பூ சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இருபுறம் கற்தூண் சிறிய அளவில் வாசற்கால் போல அதில் சிற்பம் இருந்துள்ளது. சுண்ணாம்பு மூலம் மறைக்கப்பட்டுள்ளது. உள்ளே பழமையான கதவு மரம் இரும்புடன் அமைத்துள்ளனர். குகை இரண்டு தளங்களில் காணப்படுகிறது. அவை மேல்தளம், அடித்தளம் ஆகும்.

**மேல்தள குகை**

மேல்தள குகை வாயிலிலிருந்து ஏழு படிகள் இறங்கிய பிறகு அமைந்துள்ளது. அதன் முன்பாக பைரவர் சிலை அமைந்துள்ளது. கருப்பு கல்லினால் செய்யப்பட்ட பழமையான சிலையாகும். பைரவரின் இடது பக்கத்தில் ஒரு சிற்பம் உள்ளது. அது சுண்ணாம்பு பூசப்பட்டதால்

அடையாளம் காணமுடியவில்லை. பார்ப்பதற்கு 1000 ஆண்டுக்கு முன் இருந்த சிலை போல் தென்படுகிறது. அதற்கு பக்கத்தில் புதியதாக வைக்கப்பட்ட சிவலிங்கம் உள்ளது. அடிதள குகைக்கு செல்லவாயில் அமைத்துள்ளன. தெற்குதிசை நோக்கி அமைந்துள்ளது. அதில் யாளி சிற்பம் **வாயில் மேல் பகுதி** மற்றும் தாமரை இதழ்கள் போன்று சிற்பங்கள் வாயிற் படியில் அமைந்துள்ளது. அதிலிருந்து 12 படிகள் அமைத்துள்ளனர். அதன் வழி கீழே சென்று கிழக்கு திசையில் குனிந்து சென்ற பிறகு அடிதளகுகை உள்ளது.

### அடிதள குகை

கிழக்கு திசையில் சென்ற பிறகு அடிதள குகை உள்ளது. அதன் கிழக்கு திசையில் விநாயகர் சிலை அன்ன பறவையின் மீது அமைந்து கருவறை நோக்கிய படி உள்ளது. அந்த விநாயகர் சிலை பக்கத்தில் காற்று வருவதற்கு செவ்வகவடிவில் சந்து அமைத்துள்ளனர். அதன் வழியே குளிர்ந்த காற்று வீசுகின்றது. அங்கு குகைக் கோயில் கருவறை தெற்கில், கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அடிதள குகையில் இருந்து மூன்று படிகள் மேல் கருவறை அமைந்துள்ளது.

### குகை கோயில் கருவறை

கருப்பு கல்லால் ஆன அம்மன் சிலை வைக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளுடன் கையில் கத்தி, சங்கு, குங்குமம், ஆயுதம் என அமைந்துள்ளது. இந்த அம்மனுக்கு காற்று வருவதற்கு செவ்வாக வடிவில்சந்து அமைத்துள்ளனர். இந்த அம்மனுக்கு பின் ஐந்து சுயம்பு லிங்கம் அமைந்துள்ளன. அவை யேமிக பழமையான கற்களாகும். ஒன்று உருண்டை வடிவில் அமைந்துள்ளது. அதற்கு பக்கத்தில் சிறிய சிவலிங்கம் அமைந்துள்ளது. அந்த சிவலிங்கத்துக்கு பக்கத்தில் ஒரு கல் நான்கு புறமும் சிற்பங்களும் விஷ்ணும் தெறிகிறது. பிற சிற்பங்கள் சரிவர தெறியவில்லை. மேல் பகுதியும் கீழ் பகுதியும் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகிறது. அதன் உயரம் சாதரண எழுத்து கோல் அளவுக்கு உள்ளது. அந்த கல் உள்ளங்கையில் வைக்கும் அளவிற்கு சிறிய ஆதிகால சிற்பங்கள் கொண்ட கல்லாகும். அதற்கு பக்கதில் கல்லில் விநாயகர் சிற்பம் செதுக்கப்படுள்ளது. அதற்கு பக்கத்தில்கல் மூன்று மேடுகள் கொண்டது போல் அமைந்துள்ளது.

### வழிபாடுகள்

ரேணுகாம்காள் கோயில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் வழிபாடு சிறப்பாக நடைபெறும் நங்கமங்களம் ஊரில் உள்ள ராமர் கோயிலில் தங்கத்தாலான அம்மன் சிலை கொண்டு வரப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்த பிறகு ஊர்வலம் கொண்டு செல்வார்கள். மற்றும் சிவபவுர்ணமி, அமாவசை, சித்திரை மாதம் ஒரு முறை பூசை என மக்கள் அம்மனை வழிபாடு செய்கின்றனர். வேண்டுதலின் போது உயிர் பலி கொடுக்கப்படுகிறது.

### கோயில் வெளிபுறம்

கோயில் வெளிபுறம் குன்றுகளும் குகைகளும் நிறைந்து இயற்கை அழகு சூழ்ந்த மலைக்கோயிலுக்கு வடதிசையில் குன்றின் மேல் குன்று அழகாக அமைந்துள்ளது. அதன் அடியில் உள்ள விளையாட்டு கோடுகள் தாயம் அல்லது ஆடுபுலி ஆட்டமாக இருக்கலாம். அந்த குன்றின் மேல் 1 அடி ஆழத்திற்கு 3 அடி அகலத்திற்கு அடியில் தண்ணீர் நிறைந்து காணப்படுகிறது. தெற்குதிசையில் பெரியபாறை அமைந்துள்ளது. அங்கு ஆடுபுலி ஆட்டம் விளையாட்டு கோடுக்காணப்படுகிறது. அதேபக்கத்தில் பாறை மேல் ஏழு கற்கள்அமைந்துள்ளன. அது கன்னிகள்

என்று சொல்லப்படுகிறது. அதன் முன் நாய் வடிவ சிலை அமைந்துள்ளது.

**ஐயனார் சாமி**

கோயிலுக்கு தெற்கில் வடதிசை நோக்கி சிலைவைக்கப் பட்டுள்ளது. அந்த சிலை குதிரையின் மேல் அமர்ந்தபடி உள்ளது. இந்த சிலை பச்சை நிற கற்களால் செய்யப்பட்டுள்ளன. இந்த ஐயனாருக்கு கூட கோபுரம் போன்ற சிறு கோயில் அமைத்துள்ளனர். இதற்கு தனியாக பூசைகள் செய்வதில்லை. ஐயனாருக்கு விளக்கு மட்டும் ஏற்றப்படுகிறது.

**விளக்கு ஏற்றும் தூண்கள்**

கோயிலிருந்து தெற்கு பகுதியில் பாறைமேல் குன்றின்மேல் விளக்கேற்றும் தூண் அமைந்துள்ளது. இந்த தூணில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. இதுபோன்று தூண்கள் அந்த மலை பகுதியில் மூன்று இடங்களில் காணப்படுகின்றன. ஒவ்வொரு தூணும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு இருக்கிறது என்பது கணிப்பாக உள்ளது. இந்த தூண் பக்கத்தில் நின்று பார்த்தால் தெற்கு குருகுருநத்தம் மலைமேல் ஒருதூண் அமைந்துள்ளது. அந்த தூணின் பக்கத்திலுருந்து பார்த்தால் இன்னொரு தூண் தென்படுகின்றன. அவ்வாறே சுற்றி பார்த்தவரைக்கும் 9 தூண்கள் காணப்படுகிறன. மலைகள், சமதள மேட்டு பகுதியில் காணப்படுகிறது. வள்ளிமலை தொடங்கி ரத்தினகிரி வரை இந்த விளக்கு தூண் தொடர்ந்து அமைந்துள்ளது. ஒவ்வொரு தூணுக்கும் இடையே இரண்டு அல்லது ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருக்கும். இப்பகுதியில் பார்த்த ஊர்கள் வள்ளிமலை, திகுவப்பள்ளி, மேல்காட்டூர், நங்கமங்கலம், குருகுருநத்தம், பள்ளிக்குப்பம், ரத்தினகிரி போன்ற இடங்களில் காணப்படுகிறது. இவைகள் போன்று இன்னும் பலதூண்கள் இருக்ககூடும்.


**சுனை நீர்**

ஐயனார் சிலைக்கு பின் பகுதியில் ஐந்து குன்றுகள் சூழப்பட்ட சுனை நீர் ஒன்று அமைந்துள்ளது. இதன் ஆழம் ஒரு மனிதன் அளவாகும் அகலம் 7 அடி அகலம் இருக்கும். கண்ணாடி போன்ற தெளிந்த நீர் காணப்படுகிறது. இந்த சுனை பக்கத்தில் அம்மன் மஞ்சள் அரைத்து குளித்ததாக சொல்லப்படுகிறது. அது மட்டும் இன்றி அந்த சுனை நீருக்குள் இரண்டு அம்மன் சிலை உக்கிரமாக கோபமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த இரண்டு அம்மன் சிலை பச்சை நிற கற்களால் ஆனது. இரண்டு சிலையும் ஆயுதங்களுடன் அமர்ந்த கோலத்தில் உள்ளது . இரண்டும் வெவ்வேரு அமைப்பை கொண்டுள்ளன. இந்த சிலைகள் பெரும்பாலும் யார் கண்களுக்கும் தென்படுவதில்லை. இந்த சுனைநீர் தான் அம்மனுக்கு பூஜை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.


**தமிழி எழுத்து**

அந்த சுனை நீர் அருகில் அம்மன் எழுத்து இருக்கிறது என்று ஒரு சிலர் சொல்கின்றனர். அங்கு பார்க்கும் போது அது தமிழி எழுத்தோடு ஒத்த வரிவடிவை கொண்டுள்ளது. அதன் வடிவம் தமிழில் இருந்து வட்டெழுத்தின் வளர்ச்சி நிலையில் உள்ளது. இதன் காலம் கி.பி. 2 – 3 ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதனைதொடு உணர்வின் மூலம் படி எடுத்துபார்க்கும் போது கல் வெட்டின் செய்தியினை அறிய இயலவில்லை. கல்வெட்டுகள் சிதைந்து காணப்படுவதால் கல்வெட்டின் செய்தி அறிய முடியவில்லை. ஆயினும் தமிழி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அதனை சுற்றியுள்ள

பகுதிகளில் வள்ளிமலை, மேல் பாடி போன்ற இடங்களில் தமிழ் எழுத்துகளும் வட்டெழுத்துகளும் காணகிடைக்கின்றன. வடதமிழகத்தில் தமிழி எழுத்து காணப்படுவதில்லை இருப்பினும் இந்த இடத்தில் தமிழி எழுத்து வடிவம் தென்படுகிறது.







**சமணர் தடங்கள்**

சுனை நீருக்கும் தமிழி எழுத்து இருக்கும் பகுதிக்கும் மேல் பகுதியில் மூன்று குன்றுகள் சூழப்பட்டு நடுவில் அமர்வதற்கும், உறங்குவதற்கும் வழவழப்பான சிறுகுன்று அமைந்துள்ளது. அருகில் சுனை நீர் அதை சுற்றியும் காட்டுப்பழங்கள் என பல பழங்கள் சூழ்ந்து காணப்படுகிறது. இயற்கையான குகை தளங்களும் அமைந்துள்ளது. இந்த மலையின் தொடர்ச்சியே வள்ளிமலையாகும். அங்கும் சமணர்களும், ஜைனர்களும் வாழ்ந்துள்ளனர்.

**கோயில் வரலாறும் செய்தியும்**

நங்கலமங்கள அம்மன் அல்லது ரேணுகாம்பாள் கோயில் பஞ்சலோக (5 உலோகங்கள்) உருவத்துடன், நான்குகைகளுடன் மனித உருவத்தில் நெத்தம் கிராமத்தின் அருகிலும் டிரங்ச்சாலைக்கு அருகிலும் ஒரு குன்றின் மேல் அமைந்துள்ளது. மூன்று கற்பாறைகள் உள்ளன. கற்பாறைகளுக்குக் கீழே தெய்வத்தின் கல் உருவத்துடன் ஒரு குகை உள்ளது. (பக்கம்-12CENSUS OF INDIA – 1961 volume – II, Andhra Pradesh)

**மக்கள் சொல்லும் செய்திகள்**

ஆரம்பத்தில் அந்த மலை குன்று உள்ளே புற்று ஒன்று இருந்துள்ளது. அந்த மலை பகுதியில் மக்கள் பசுக்களை மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டுவருவார்கள். அதில் ஒருவருடைய கறவைமாடு ஒருவாரம் பால் தரவில்லை. அதன் காரணம் அறிய பசுக்களைக் கண்காணிக்க ஆரம்பித்தனர். மேய்ச்சலின் போது அந்தமாடு அருகில் உள்ள குன்றின் வெடிப்பில் வழியே உள்ளே சென்று புற்றுக்கு மேல் தானாக வேபால் சுரப்பது அறியவந்தது. அதன் பிறகு வெளியே வந்த கறவைமாடு பிறமாடுகளுடன் செல்வதை பார்த்த மாட்டுக்காரன் ஒருநாள் கோபமாக அந்த மாட்டிடம் உன்னை காசுக்கு வாங்கி காடுமேடு என மேய்த்தால் நீ எனக்கு பால் தராமல் புற்றுக்கு பால் தருகிறாயா என்று மாட்டின் தலையை வெட்டிவிடுகிறான். அவன் முன் கோபத்துடன் அம்மன் காட்சிதருகிறாள். மாட்டுக்காரனிடம் என்னை சாந்தப்படுத்திய அந்த மாட்டை வெட்டிய உன்னை சம்காரம் செய்கிறேன் என்று அவனை அழித்தது. இந்த செய்தியை கோயில் கோபுரத்தில் சிற்பமாக அமைத்துள்ளனர்.200 ஆண்டுகளுக்கு முன் ஒரு அம்மா அந்த கோயிலை அடைந்தார்கள். அந்த அம்மா என்னிடம் சொத்து எல்லாம் இருந்தும் என் குடுபத்திற்கு ஒரு வாரிசுமில்லை. எனக்கு குழந்தை வரம் தந்தால் உனக்கு தங்கத்தாலான சிலை செய்துதருகின்றேன் அதற்கு மடிபிச்சை எடுத்து சிலைவடிக்கிறேன் என்றாள் அந்த அம்மா. ரேணுகாம்பாள் அருளாள் அந்த அம்மாவுக்கு குழந்தை பிறந்தது. அந்த

அம்மா சொன்னப்படியே மடிப்பிச்சை எடுத்து தங்கசிலை அம்மன் வடிவில் தந்தனர். இந்த சிலை இன்றளவும் வழிபாடு செய்து வருகின்றனர்.

**முடிவுரை**

மலையின் மேல் அமைந்துள்ள கோயிலின் பாதை ஆந்திர மண்ணிலும் கோயில் தமிழ்நாட்டு மலையிலும் அமைந்து இயற்கை அழகு நிறைந்து காணப்படுகிறது. சுனை நீர் மற்றும் காட்டு பழங்கள் மனிதன் வாழ்வதற்கு எற்ற அமைப்பு காணப்படுகிறது. சமணர்கள் படுக்கையும் சோழர் கால சிலைகலும் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது. தமிழி எழுத்து வட்டெழுத்தின் வளர்ச்சி அமைப்பை ஒத்திருப்பது போல தென்படுகிறது. இருந்தாலும் வடதமிழகத்தில் தமிழி எழுத்து கிடைப்பெறும் இடமாக இக்கோயில் அமைந்துள்ளது. கருவறையில் உள்ள சுயம்பு ஐந்து கல்லில் ஒன்றான சிலையான பல சிற்பங்கள் கொண்டு ஆச்சரியம் தரும் வகையில் சிலை செதுக்குவதில் கைதேர்ந்தவர்கள் இருந்துள்ளனர் தமிழகத்தில். கருவறைக்கு குளிர்ந்த காற்றுவருவதற்கு அறிவியல் நுட்பம் தேர்ந்தவர்களும் தமிழகத்தில் இருந்துள்ளனர். தமிழி எழுத்தின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் வடதமிழகத்தில் வாழ்ந்துள்ளனர். தகவல் பரிமாற்றத்திற்கு தூண்கள் அமைத்துள்ளனர் நம் தமிழர்கள். இறந்தவர்களை வழிபடும் மக்கள் தமிழர்கள் நடுகல் போன்று கோயில் நுழைவாயில் அமைத்துள்ளனர். கோயில் பற்றிய பலசெய்திகள் மறைக்கப்பட்டுவருகின்றன. கல் என்றாலும் மண் என்றாலும் பல வரலாறுகளையும் செய்திகளையும் சுமந்து கொண்டு தான் இருக்கிறது தாய் போல், ரேணுகாம்பாள் கோயில் தமிழர்களின் வரலாறு காட்டும் கோயிலாக தமிழகத்தின் எல்லையில் அமைந்துள்ளது.

**துணைநூல்கள்**


1. Archaeological Survery of India, மெட்ராஸ், பதிப்பு -1882.
2. CENSUS OF INDIA , volume – II, Andhra Pradesh, A. Chandra sekhar, 1961.
3. List of Inscriptions and Sketch of the Dynasties of Southern India, Government Press,1884.
4. A Manual of the North Aroct District in the Presidency of Madras, Arthur Frederick Cox, 1881.
5. North Aroct , Volume 2, Harold A. Stuart, 1894.
6. Working Plans Sanctioned by the Board of Revenue, 1903.


**தகவலாளர்பட்டியல்**

| பெயர் | ஊர் | வயது | பாலினம் | படிப்பு | தொழில் |
|---|---|---|---|---|---|
| கிரிபாபுஇ | கெட்ரால மிட்டா | 50 | ஆண் | 6 வகுப்பு | ஜோதிடம் |
| புருஷோத்தமன்க | சேர்க்காடு கூட்ரோடு | 33 | ஆண் | EEE | TANSI Project Manager |
| ஹரிஷ் | முத்தரசிக்குப்பம் | 30 | ஆண் | BTECH | இ-சேவை மையம் |
| அஜித்த | பெரியமுத்தரசிக்குப்பம் | 24 | ஆண் | DME | விவசாயம் |

**சிலபுகைப்படம்**

















